# இயேசு யார்?

## பாடம் - 1

இயேசு யாரென்று நாம் ஏன் அறிந்துகொள்ள வேண்டும்?

ஒவ்வொரு மனிதனும் தனக்கு முன்னிருக்கும் பிரச்சனைகளையும், வரப்போகிற எதிர்காலப் பிரச்சனைகளையும், அவைளுக்கான தீர்வுகளையும் பற்றி முன்னதாகவே சிந்திப்பதால்தான் அவற்றைச் சமாளிக்க முடிகிறது. வரப்போகிற பிரச்சனைகள் என்னவென்று தெரியாதவனும், தெரிந்தும் அவற்றை நம்பாதவனும் நிச்சயமாகவே இன்னல் அடைவார்கள். உலகில் தோன்றிய எல்லா மனுஷருக்கும் இருக்கிற மிகப்பெரிய பிரச்சனை என்னவென்றால், ஒவ்வொருவரும் மரணமடைவதும், மரணத்திற்குப்பின் தேவனுடைய சந்நிதியில் நிறுத்தப்பட்டு தனது செயல்களுக்கேற்ற நியாயத்தீர்ப்பினை அடைவதுமாகும். இந்த நியாயத்தீர்ப்பு தேவனால் நியமிக்கப்பட்டுள்ளதாகும். இதை மாற்றவோ, மறுக்கவோ, தப்பிக்கவோ முடியாது. *அதாவது ஒருவன் நம்பினாலும், நம்பாவிட்டாலும் தேவனுடைய நியாயத்தீர்ப்பினைச் சந்தித்தே ஆகவேண்டும்.* இந்த நியாயத்தீர்ப்பினை ஒவ்வொருவனும் தனித்தனியாகவே சந்திக்க வேண்டும். அதாவது ஒருவனது மதசார்பான நம்பிக்கைகளோ, திறமைகளோ, நாவன்மையோ, அவனுடைய உற்றார் உறவினர்களின் உறவோ, நண்பர்களின் நட்போ அவன் நியாயத்தீர்ப்பைச் சந்திக்கும்போது அவனுக்கு உதவாது.

**ஒரு பாவமும் செய்யாத பரிசுத்தவான் உலகில் இல்லை** என்பதால், எல்லா மனுஷனுமே மகாபரிசுத்தமுள்ள தேவனுடைய பார்வையில் குற்றவாளியாகக் காணப்பட்டு, நித்திய நரகத்திற்கு ஏதுவானவர்களாகவே இருக்கிறார்கள். மரணமடைந்த உடனேயே ஒவ்வொரு ஆத்துமாவும் தான் செய்த பாவங்கள் அனைத்தையும் கண்முன் கண்டுவிடுவதால், அவற்றை மறுக்கவோ, நியாயப்படுத்தவோ முடியாமல், தான் நித்திய நரகத்திற்கு அனுப்பப்படுவதையறிந்து துடிக்கின்றது. பரிசுத்த வேதாகமமும், அநேக பரிசுத்தவான்களின் சாட்சிகளும் இதை மேலும் மேலும் உறுதிபடுத்தி வருகிறது.

எனவே இந்த நித்திய நரக ஆக்கினையிலிருந்து எப்படித் தப்பித்துக்கொள்வது?

இதுதான் ஒவ்வொருவர் முன்னும் வைக்கப்பட்டிருப்பதும், அவர்களை நோக்கி வந்துகொண்டிருப்பதுமான மிகப்பெரிய பிரச்சனை. ஆனால் தேவன் மனிதன் மீது வைத்த அன்பினால், இந்தப் பிரச்சனையைச் சமாளிக்க ஒரு திட்டத்தை ஏற்படுத்திக்கொடுத்துள்ளார். அதுதான் நியாயத்தீர்ப்பைக் கொடுக்கும் அவருடன் ஒருவன் இணைந்துவிட்டால், அவன் தண்டனைக்குத் தப்பித்துக்கொள்ளலாம். தேவனையும் மனிதனையும் இணைக்கும் நேர்கோட்டினை ஒருவன் அறிந்துகொண்டுவிட்டால் அவருடன் இணைந்துவிடலாம். தேவனையும் மனிதனையும் இணைப்பதும், தேவனிடத்திலிருந்து புறப்பட்டு, அவரிடத்திற்கே திரும்பியதும், என்றும் இருப்பதும், வளைக்கவோ, அழிக்கவோ, மாற்றவோ முடியாததுமான அந்த நேர்கோடுதான் இயேசு என்னும் இரட்சகர். **இது தேவன் வரைந்த கோடு.**

இந்த நேர்கோட்டை மற்ற மதங்கள் மற்றும் மகான்கள் என்று சொல்லப்படுகிறவர்கள், விஞ்ஞானிகள், தத்துவ ஞானிகள் போன்றவர்கள் ஏற்றுக்கொள்ளாமல், பலவகைக் கோடுகளைப்போட்டு, தேவன் மனிதன் என்ற இரண்டு புள்ளிகளையும் இணைக்க முயன்று வருகிறார்கள். ஆனால் கணித முறைப்படி இரண்டு புள்ளிகளை இணைத்து ஒரே ஒரு நேர்கோடுதான் வரைய முடியும் என்பதால், இவர்களின் முயற்சிகள் தோற்றுவிட்டன. எனினும் தேவன் வரைந்த நிலையான நேர்கோடாகிய இயேசுக்கிறிஸ்துவை பல இடங்களில் இவர்கள் வரைந்த கோடுகள்(மார்க்கங்கள்) வெட்டுகின்றன, ஒட்டுகின்றன, ஆனால் அடையவேண்டிய இலக்காகிய தேவனை அவைகள் அடைவதில்லை. கிறிஸ்துவின் சத்திய மார்க்கத்திலுள்ள பல கருத்துக்கள் மற்றவற்றிலும் உண்டு, ஆயினும் அவைகளின் வழியில் செல்லும் எவரும் தேவனை அடைந்து, நித்திய நரக ஆக்கினைக்குத் தப்பிக்கொள்ளப்போவதில்லை. இது சத்தியம். எனவேதான் நாம் இயேசு என்னும் இரட்சகரை அறிந்துகொள்ளவேண்டியது அவசியம்.

ஒவ்வொரு மனிதனுக்கும் குறிப்பிட்ட அளவு மட்டுமே ஆயுள்நாட்கள் கொடுக்கப்பட்டுள்ளதால், ஒவ்வொரு நாளும் நாம் மரணத்தை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறோம் என்பது தெளிவாகிறது. அதாவது நாம் சந்தித்தே ஆகவேண்டிய அந்த நியாயத்தீர்ப்பு நம்மை நோக்கி வந்துகொண்டே இருக்கிறது. அது நம்மை

அடைவதற்குள் அதற்கான ஒரே தீர்வாகிய இந்த இயேசுவைக்குறித்து அறிந்துகொள்வது மிகவும் அவசியமில்லையா. நமது வாழ்வில் நாம் செலவிடும், வீணாக்கும் எத்தனையோ நேரங்களில், நாம் சந்திக்கப்போகும் இந்தப் பெரிய பிரச்சனைக்கான தீர்வைக்குறித்து, அதாவது இயேசுவைக் குறித்து அறிவதற்குச் செலவிடும் நேரங்களே பயனுள்ளதாகும்.

பரிசுத்த வேதாகமம் சொல்லுகிறபடி இந்த நியாத்தீர்ப்பைக்குறித்த சத்தியத்தை யாவரும் நம்பித்தான் ஆகவேண்டுமா? ஆம், அப்படி நம்புவதுதான் புத்திசாலித்தனமாகும்.

உயரமான கட்டிடம் ஒன்றில் நன்றாக அமைக்கப்பட்ட ஒரு மேடையில் நின்று ஒரு தொழிலாளி கட்டிடத்திற்கு வர்ணம்பூசிக்கொண்டிருந்தான். அதற்குமுன் அவன் தன் இடுப்பைச்சுற்றி ஒரு கயிற்றைக் கட்டி, அதன் மறு முனையை கட்டிடத்தின் ஒரு இரும்புக் கிராதியில் இணைத்துக் கட்டிக்கொண்டிருந்தான். அதைக் கண்ட ஒருவர், நீங்கள் பாதுகாப்பாக அமைக்கப்பட்ட ஒரு மேடையில் நின்றுகொண்டுதானே வேலைசெய்யப்போகிறீர்கள், அதிலிருந்து விழுந்துவிட வாய்ப்பில்லாதபோது நீங்கள் ஏன் ஒரு பாதுகாப்புக் கயிரை உங்கள் அரையில் கட்டவேண்டும் என்று கேட்டார். அதற்கு அவன், ஆம், அந்தப் பாதுகாப்பு மேடையிலிருந்து நான் 99 சதவீதம் விழுந்துவிட வாய்ப்பில்லைதான். ஆனால் ஒரு சதவீதம் நான் விழுந்துவிட வாய்ப்புண்டு. அந்த ஒருசதவீத வாய்ப்பு என் உயிரைப் பறித்துவிடக்கூடாதல்லவா, அதற்காகத்தான் இந்தப் பாதுகாப்புக் கயிற்றைக் கட்டிக்கொள்கிறேன் என்றான்.

பரிசுத்த வேதாகமம் சொல்லுகிற இந்த நித்திய நியாயத்தீர்ப்பு என்பது நூறு சதவீத சத்தியம். இருப்பினும் நீங்கள் அதை 99 சதவீதம் நம்பாமற் போகலாம். எஞ்சிய ஒரு சதவீதமாவது அதை நீங்கள் நம்பும்போது, அந்த ஒரு சதவீதம் உங்களுக்கு நித்திய வாழ்வா, நித்திய வேதனையா என்பதை தீர்மானிக்கிற ஒன்றாக இருப்பதால், நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாக இருந்தே ஆகவேண்டும். அதாவது, நித்திய நியாயத்தீர்ப்பு ஒரு சதவீதமாவது உண்மையாக இருக்குமானால், அதற்கு நீங்கள் தயாராக இருக்கிறீர்களா? என்ற கேள்வியை உங்களுக்குள்ளேயே கேட்டுப்பாருங்கள். அப்படி நீங்கள் தயாராவதற்கு இயேசுகிறிஸ்துவைக் குறித்து அறிந்துகொள்வதே புத்திசாலித்தனமாகும்.

## இயேசுவைக்குறித்து அறியாவிட்டால் என்ன நேரிடும்?

உலகில் மருந்து கண்டுபிடிக்கப்படாத நோய்கள் பல உண்டு. அந்நோய்களால் எத்தனையோ மக்கள் காலங்காலமாக மரித்துக்கொண்டு வருகிறார்கள்.

சில நோய்களுக்கான மருந்துகள் எளிய உணவுப்பொருட்களில் அடங்கியிருப்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்து வெளிப்படுத்திவிடுவதுண்டு. உடனடியாக அம்மருந்துகள் தயாரிக்கப்பட்டு யாவருக்கும் கிடைக்கும்படி செய்யப்படுவதுண்டு. ஆயினும் அந்த மருந்துகளை ஏற்றுக்கொண்டு அந்தக் குறிப்பிட்ட நோயுள்ள யாவரும் பிழைத்துக்கொள்கிறார்களா என்றால், இல்லை. காரணம் சிலர் அம்மருந்துகளை நம்புவதில்லை, சில மருத்துவர்களுக்கு பல ஆண்டுகளாக அம்மருந்துகள் இருப்பதே தெரிவதில்லை. இதுபோல் மருந்து கண்டுபிடித்தும் அதைப்பயன்படுத்தாமல் மாண்டுபோகிறவர்கள் ஏராளம் உண்டு.

பாவம் என்னும் விஷத்தினால் நித்திய நரகம் என்னும் மரணத்தைச் சந்தித்துக்கொண்டிருக்கும் மனிதகுலம், இயேசு என்னும் தேவனுடைய ஒரே மருந்தினால்தான் மரணத்தைச் சந்திக்காமல் காக்கப்பட முடியும். இதை நம்பாதவர்களும், அறியாதவர்களும், அறிந்தும் ஏற்றுக்கொள்ளாதவர்களும் அழிந்துபோவது சர்வ நிச்சயமாகும்.

இயேசு யார் என்ற கேள்வியை உங்களிடம் கேட்டால் நீங்கள் அதைப்பற்றி அதிகமாய் சிந்தித்திருக்கமாட்டீர்கள். எனினும் நீங்கள் கீழ்க்கண்ட பதில்களில் ஒன்றைக் கூறக் கூடும்.

1. இயேசு ஒரு நல்ல மனிதர். மனிதகுலத்திற்கு நல்லவைகளைச்சொல்லி, நல்லதைச் செய்தவர், இவரைக் கிறிஸ்தவர்கள் தெய்வமாக வழிபடுகின்றனர்.

2. இயேசுவும் எத்தனையோ தெய்வ அவதாரங்களில் ஒருவர். அவரையும் வணங்கலாம். அப்படி வணங்கி சில நன்மைகளை அடையலாம்.

மேற்படி இரண்டு கருத்துக்களுமே இயேசுவைப் பற்றி அவரை அறியாத மக்கள் நினைத்துக் கொண்டிருக்கும் பொதுவான, தெளிவற்ற கருத்துக்களாகும்.

ஆனால், உண்மையில் இயேசு யாரென்றால்,

**1.நேற்று:** - இயேசு ஒருவரே மனிதனையும், கண்களால் காணப்படுவதும், காணப்படாதவைகளுமான யாவற்றையும் படைத்த தேவனும், தேவகுமாரனுமாய் இருக்கிறர்.

அவரே, தான் படைத்த மனிதன் பாவம் செய்தபோது அவனைத் தண்டித்து அழிக்காமல், பாவத்தின் தண்டனையைத் தன்மீது ஏற்றுக்கொண்டு சிலுவையில் சுமந்து தீர்த்தவர்.

இந்தப் பணியை முடிக்கும்படியாக அவர் இந்தப் பூமிக்கு வந்தபோது, தனது வார்த்தைகள், செயல்கள், வாழ்க்கை நிகழ்ச்சிகள் மூலமாக தான் யாரென்பதை யாவருக்கும் வெளிப்படுத்தினார். இறுதியாக மூன்றாம்நாள் உயிரோடு எழுந்து, இன்றுவரை பலருக்கும் தரிசனமாகி, இன்றும் பரலோகில் வீற்றிருக்கிறார்.

**2.இன்று:-** தன் பாவங்களை உணர்ந்து மனம் வருந்தி அவரை நோக்கிக் கூப்பிடும் யாவருக்கும் பாவமன்னிப்பை அளித்து பரலோகில் சேர்க்கவல்லவர் அவர் ஒருவர் மட்டுமே. இவர் மூலமாக அல்லாமல் வேறெந்த வழியிலும் மனிதர்கள் நித்திய தண்டனைக்குத் தப்பி, பரலோகத்திற்குப் போக முடியாது.

**3.நாளை:-** சகல மனிதர்களையும் நியாயம் தீர்க்க தாம் சொன்னபடியே விரைவில் இந்த உலகிற்கு வரப்போகிறவர் அவரே. இந்த நியாயத்தீர்ப்பை யாரும் மாற்றவோ தடுக்கவோ முடியாது.

மேற்சொல்லிய மூன்றும் மட்டுமே இயேசுவைக்குறித்து உண்மையாகவும். சத்தியமாகவும் உள்ளது. இது தேவனால் ஏற்படுத்தப்பட்டதும், தேவ கிருபையைப் பெற்றவர்களேயன்றி மற்றவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததுமான சத்தியமாகும். **எனவே இதனை மீண்டும் ஒருமுறை படித்து சிந்தனை செய்யுங்கள்.**

இயேசு எவ்விதம் மற்ற தெய்வங்களிலிருந்து உயர்ந்தவர்:

இயேசு யார் என்பதையும், அவர் எவ்விதம் மற்ற கடவுள்கள் என்று சொல்லப்படுகிறவர்களிலிந்து வேறுபட்டவர் என்பதையும் கீழ்க்கண்ட உண்மை நிகழ்ச்சியினைக்கொண்டு புரிந்துகொள்ள முயற்சியுங்கள்.

ஒரு கிராமத்தில் ஒரு 18 வயது வாலிபன் குடித்து, சூதாடி பல தீய வரிகளில் நடந்து வந்தான். அவனது தந்தையும், பக்கத்து வீட்டுப் பெரியவர்களும், உள்; ரில் குடியிருக்கும் அவனது ஆசிரியரும் அவனைப் பலமுறை எச்சரித்து, திருந்தி வாழும்படி கேட்டுக்கொண்டார்கள். அவனோ எதையும் மதியாமல் தீய வழிகளில் சென்றுகொண்டேயிருந்தான். ஒருநாள் அவன் பக்கத்துக் கிராமத்திற்குச் சென்று நன்கு குடித்துவிட்டு வீட்டுக்குத் திரும்பும் வரியில், அதிக போதையினால் கால் இடறி பாதையோரம் இருந்த சேறும் சகதியுமான பள்ளத்தில் விழுந்துவிட்டான்.போதையினால் எழுந்திருக்க முடியாமல் கிடக்கும் அவனைப் பார்த்து அவ்வழியில் சென்ற பெரியவர்களில் சிலர், “யார் பேச்சையும் கேட்காமல் தாறுமாறாக நடந்த உனக்குச் சரியான தண்டனை கிடைத்துவிட்டது, போதை தெளியும்வரை சகதியில் கிடந்தால்தான் உனக்குப் புத்தி வரும்” என்று கூறிச்சென்றனர். அவனுடைய ஆசிரியரொவர் அவனைக்கண்டு “யார் சொன்னதையும் கேட்காமல், உனக்கென தனி வழியைத் தெரிந்துகொண்டாயல்லவா, உனது வழியின் பலனை நீயே அனுபவி” என்று கூறிச் சென்றார். அவனுடைய நண்பன் ஒருவனும் “இப்படியா நிதானமில்லாமல் குடிப்பது, நாங்களெல்லாம் நிதானமாகக் குடிக்கவில்லையா” என்று கூறிச்சென்றான். இப்படியாக யாவரும் அவனைக் குற்றம்சொல்லிச் சென்றனரேயல்லாமல் யாரும் தனது ஆடைகள் அழுக்காகிவிடும் என்பதால் அவனைத் தூக்கிவிடவில்லை.

இறுதியாக அவனது தந்தை அந்த வழியே வந்தார். அவரும் அவனைச் சகதியிலேயே விட்டுச்செல்வாரோ, எப்படி முடியும்? அவர் அவனைக் கண்டதும் தனது ஆடைகள் அழுக்காகுமே என்பதையும் பொருட்படுத்தாமல், சேற்றில் இறங்கி, அவனைத் தூக்கியெடுத்து, அருகிலுள்ள கிணற்றடியில் நீரெடுத்து, அவனை சுத்தமாக்கி, அவனைப்பார்த்து நடந்ததெல்லாம் போகட்டும். இனியாவது ஒரு நல்ல வாழ்க்கை வாழ

முயற்சிசெய்யடா எனக் கூறிச்சென்றார். போதையில் கிடக்கும் மகன் அவரிடம் யாரடா நீ என்று கேட்கிறான். போதையினால் அவனுக்குத் தந்தை யாரேனத் தெரியாவிட்டாலும் அவர் அவனை மன்னித்து, இனியாவது திருந்தி வாழவேண்டும் என்றார்.

இந்த நிகர்ச்சியினைக் கூர்ந்து கவனியுங்கள்.

ஒ ரு மனிதனுக்கு நல்லதைச் சொல்ல அநேகர் உண்டு. அந்த நல்லதை அவன் கேட்காவிட்டால் அவர்கள் அவனைக் குற்றம்சாட்டிவிட்டுத் தங்கள் வழியே போய்விடுவார்கள். யாரும் அவனுக்காகத் தனது ஆடைகளை அழுக்காக்கி தூக்கிவிட வரமாட்டார்கள். ஏனெனில் அவர்கள் அனைவருமே அவனுக்கு அந்நியர்கள்தான். ஆசிரியர்களும், பெரியவர்களும் ஒருவனுக்குத் தகப்பனைப்போலத் தெரிந்தாலும் அவர்கள் உண்மையான தகப்பனாக முடியாது. உண்மையான தந்தை மட்டுமே அவனுக்காகத் தியாகம் செய்யவும், அவனை மன்னித்து, அவன் புதிய வாழ்வு வாழவேண்டும் என விரும்பவும் செய்வார். உரியவன் எவனோ அவனே காப்பவனும், அதற்காக தியாகம் செய்பவனுமாய் இருக்க முடியும். ஒருவனுக்கு ஒரே ஒரு தந்தைதான் இருக்க முடியும். மற்றவர்கள் கடந்தகால செயல்களுக்கு தண்டயை வழங்க விரும்புவார்கள், தகப்பன் மட்டுமே கடந்த காலத்தை மன்னித்து எதிர்காலத்தை வளப்படுத்த விரும்புவார்.

மேற்சொன்ன நிகர்ச்சியைப்போல்தான் இன்று உலகில் தோன்றிய அனைத்து மதங்களும், மகான்களும், பல நல்லதாகத் தோன்றுகிற வழிகளைப்போதித்து, தீயவழி வாழக் கூடாதென எச்சரிக்கின்றனர். மனிதனோ யார்சொல்வதையும் கேட்காமல், தனது குழந்தைப் பருவம் முதல், *யாரும் கற்றுக்கொடுக்காமலேயே,* பொய் முதலான பாவங்களைச்செய்து, அதன் பலனாகப் பல துன்பங்களை அனுபவிக்கத் துவங்கிவிட்டான். அவைகளெல்லாம் நீதியைப் போதிப்பதற்காக இயற்றப்பட்ட கதைகளையே தெய்வ வெளிப்பாடாகக் கருதும் மிகவும் அப்பாவி மக்களைப் பார்த்து, *உனது பாவத்தின் பலனை நீயே அனுபவித்தாக வேண்டும்,* இப்பிறவியில் துன்பங்களாகவும், பின்னர் நாயாக நரியாகப் பிறந்தும் துன்புற வேண்டும், நாங்கள் சொல்கிறபடி வாழாவிட்டால் அதுதான் கதி” என்று சொல்கின்றனர்.

ஆனால் மனிதனைப் படைத்த உண்மையான தெய்வம் மட்டும் பாவத்தின் பலனை அவனே அனுபவிக்கட்டும் என்று தீர்ப்புச்செய்யாமல், சேற்றில் விழுந்த மகனைத் தூக்கிய தந்தையைப்போல, தான் இந்தப் பாவமுள்ள பூமிக்குள் மனிதனாக இறங்கி, நமது பாவத்தினால், நாம் அடையவேண்டிய தண்டனையை, தன் உடலில் ஏற்றுக்கொண்டார். ஆம், அப்படி உலகில் வந்த, நம்மைப் படைத்த தெய்வமே இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர். மற்றவர்களெல்லாம் தங்களுடைய செயல்களுக்கேற்ப அவரால் நியாந்தீர்க்கப்படப் போகிறவர்கள். சுருக்கமாகச் சொல்லப்போனால், பாவமன்னிப்பு என்ற ஒன்றை இயேசு ஒருவரே மனிதனுக்கு வழங்குகிறவரும், வழங்க அதிகாரமுடையவராகவும் இருக்கிறார்.

ம ற் ற எல்லாரிலும் தந்தை ஒருவனுக்கு எப்படி வேறுபட்டவரோ அப்படியே இயேசுவும் நல்லதைச் சொல்லும் அனைவரிலும், தெய்வங்கள் என்று சொல்லப்படும் அனைவரிலும் வேறுபட்டவர்.

எ வ ா் தன்னை சேற்றிலிருந்து தூக்குகின்றாரோ, அவரே தனது தந்தை எனபதைப் போதையில் இருக்கும் மகன் யூகிக்க முடியும். எந்த தெய்வம் நமது பாவத்தின் பலனைத் தான் ஏற்றுக்கொண்டு நம்மைப் பாவத்திலிருந்து தூக்கிவிடுகிறாரோ அவர் மட்டுமே படைத்தவரும், பாதுகாப்பவரும், நாம் வழிபடவேண்டியவருமாயிருக்கிறார் என்பதை உலகமாயை என்னும் போதையிலிருக்கும் மனிதகுலம் உணர்ந்துகொள்ள முடியும்.

தந்தைபோல் அநேகர் ஒருவனுக்கு நல்லதைச் சொல்வதாலேயே அவர்கள் தந்தையாகிவிட முடியாது. ஒருவனுக்கு அநேக ஆசிரியர்களும், மூத்தவர்களும் இருந்தாலும், தந்தையாக ஒருவர் மட்டுமே இருக்க முடியும். அதேபோல் நல்ல கருத்துக்களைச் சொல்வதால் மட்டுமே சொல்பவர்கள் தெய்வமாகிவிட முடியாது. இதுவரை நல்லதைச் செய்யாதவனையும் மன்னித்துத் தூக்கி நிறுத்தி, இனி நல்லதைச் செய்ய வைப்பவரே தெய்வமாகும். நல்லதைச் சொல்லும் அனைவருமே குறிப்பிட்ட அளவு மதிக்கத்தகுந்தவர்களே அல்லாமல் தெய்வங்கள் அல்ல. இயேசு ஒருவர் மட்டுமே தெய்வம் என்பதை நீங்கள் நன்கு சிந்தித்து விருப்பு வெறுப்பின்றி ஆராய்ந்துபார்த்து உணருங்கள். அதன்பின் எல்லாமே தெய்வந்தான் என்று அறியாமல் கூறமாட்டீர்கள்.

பொதுவாக தெய்வங்கள் என்று சொல்லப்படுபவைகள் தங்களை யாவரும் வணங்கவேண்டும், பூஜைகள், பண்டிகைகள், விரதங்கள், நீராடல்கள், காணிக்கைகள், ஆராதனைகளைச் செய்யவேண்டும் என்று பல வழிகளில் எதிர்பார்க்கின்றன. இப்படி சரீரத்தில் சிலகாரியங்களைச் செய்தால் அருள் கொடுப்பதாக நம்பி, மக்கள் இவற்றைச் செய்கின்றனர். மனிதன் செய்த பாவங்களை அவனுக்கு உணர்த்தி, அதன் பலனை தானேஏற்றுக்கொண்டு அவனுக்குப் புதுவாழ்வு கொடுப்பதுமில்லை, அவனை மனந்திருந்தி வாழச்சொல்வதுமில்லை. ஆனால் இயேசு என்னும் மனிதனைப் படைத்த தெய்வம் மட்டும் தனக்கென எதுவும் கேளாமல், மனிதனுக்குப் பாவமன்னிப்பை வழங்கி, புதிய வாழ்வு துவக்கச் சொல்கிறார்.

பாவமன்னிப்பின் விலை: சேற்றிலிருந்து தன்னைத் தூக்கிவிடுவதற்காக மகன் தந்தைக்கு எவ்வித கூலியும் கொடுக்கத் தேவையில்லை, அவருடைய அன்பே அவனைத் தூக்கிவிடக் காரணமாயிற்று. அதேபோல இயேசு நமது பாவங்களை மன்னிக்கும்படியாக நாம் அவருக்கு ஏதேனும் கொடுக்கவேண்டியதில்லை. நாம் பாவிகளாயிருக்கையில் இயேசு நம்மீது அன்புவைத்து நம்மை மீட்கும்பொருளாக தமது ரத்தத்தைச் சிந்திவிட்டார். நாம் இப்போது செய்யவேண்டியதெல்லாம், **நாம் பாவி என்று உணர்ந்து, அவருடைய நாமத்தைச்சொல்லிக் கூப்பிட்டு, அவர் நமது பாவங்களை மன்னித்தார் என்ற நம்பிக்கையோடு புதிய வாழ்வைத் துவக்க வேண ் டும்.**

## மனந்திரும்புதலும், பாவமன்னிப்பும்

____ஒவ்வொரு மனிதனும் இயேசுவை அறியாத நிலையில் அனுதினமும் பொய், இச்சை, காமம், வெறி, ஏமாற்று போன்ற பாவங்களைச் செய்துவிட்டான். இவைகளும், இவைகளுக்கொத்த பாவங்களும் என்னென்ன என்பதை தேவனே ஒவ்வொரு மனிதனின் இருதயத்திலும் எழுதியிருக்கிறார். மனுஷனுடைய மனச்சாட்சி கர்த்தர் தந்த தீபமாயிருக்கிறது. ஒவ்வொரு மனிதனும் செய்த பாவத்தின் அளவு மாறுமேயன்றி, பாவமே செய்யாதவன் உலகில் இல்லை. ஒவ்வொருவனும் மற்ற மனிதர்களின் கண்களுக்கு முன்பாக நல்லவனாகத் தன்னைக் காட்டிக்கொள்ள இயலும், ஏனெனில் மனிதனின் இருதயத்தில் உள்ளதை மற்றவர்கள் அறிய முடியாது. ஆனால் இயேசு மனிதனின் செயல்களையும், இருதயத்தின் நினைவுகளையும் அறிந்தவராகையால், அவருடைய கண்களுக்கு முன்பாக ஒவ்வொரு மனிதனும் பாவியாகத்தான் இருக்கிறான்.

இயேசு யார் என அறிந்த ஒவ்வொருவரும், தன் வாழ்க்கையில் இதுவரை செய்த பாவங்களுக்காக மனம்வருந்தி, தான் செய்த பாவங்களை மன்னிக்கும்படி உண்மையாக வேண்டுதல் செய்யவேண்டும். இப்படி உண்மையாக தன் பாவங்களுக்காக மனம் வருந்தி வேண்டுதல் செய்கிற எவனுக்கும் பாவங்களை மன்னித்து அவனைச் சுத்தமாக்குவதற்கு இயேசு உண்மையும் நீதியுமுள்ளவராய் இருக்கிறார்.

இப்படி பழைய வாழ்வின் பாவங்களுக்காக மனம்வருந்தி, இயேசுவின் நாமத்தினால் புதியவாழ்க்கை துவக்க விரும்பும் நிகழ்ச்சியே மனந்திரும்புதல் எனப்படும். மனந்திரும்பியவன் தன் பாவப் பழக்கவழக்கங்களையும். தேவனுக்குப் பிரியமில்லாத குணங்களையும். விக்கிரக ஆராதனைகளையும் விட்டுவிடுவான். இப்படி விட்டுவிடுபவனுக்கே இயேசு இரக்கம் செய்து அவனது பாவங்களை மன்னிக்கிறார்.

பாவமன்னிப்பு என்பது பாதிரியாரோ வேறுஒரு மனிதரோ தருவதல்ல. அது இயேசு மட்டுமே இருதயத்தில் தரும் அனுபவமாகும். ”நான் பாவஅறிக்கை செய்து அவருடைய வார்த்தையின்படியே புதிய வாழ்க்கை துவக்கிவிட்டதால் இயேசு என் பாவங்களை மன்னித்துவிட்டார்” என்ற சத்தியத்தை நம்பும்போது ஏற்படும் சந்தோஷமே பாவமன்னிப்பைப் பெற்றுக்கொண்டதற்கு அத்தாட்சியாகும். பாவமன்னிப்பு என்பது தொடர்ந்து பாவங்களைச் செய்துகொண்டே அவ்வப்போது மன்னிப்புக் கேட்டுக்கொள்ளும் அனுபவமல்ல. பாவங்களை விட்டுவிட்டு புதிய வாழ்க்கை துவங்க விரும்பாதவன், மேற்சொன்னபடி உண்மையான பாவ அறிக்கையைச் செய்யவே முடியாது. எனவே உண்மையான பாவ அறிக்கை செய்வதென்பது, இனிமேல் முன்புபோல் பாவமுள்ள வாழ்க்கை வாழக்கூடாது என்ற தீர்மானத்துடன் இணைந்த ஒன்றாகும்.

பாவ மன்னிப்பின் அவசியம்: பாவமன்னிப்பைப் பெறாத மனிதன் அநேக நற்காரியங்களைச் செய்துவிட்டால் அது அவனை பரிசுத்தப்படுத்தி பரலோகில் சேர்க்காது.

எப்படியெனில், ஒரு பாத்திரத்தில் கால்பங்கு அசுத்த நீர் இருக்கிறது, அதனுடன் முக்கால் பங்கு சுத்தநீர் சேர்த்தாலும் மொத்த நீரும் அசுத்தமாகவே இருக்கும். அதுபோல் தனது வாழ்க்கையிலே ஒருசில பாவங்களாயினும் செய்தவன், குறிப்பிட்ட காலத்துக்குப்பின் புண்ணியங்கள் மட்டுமே செய்தாலும் அவனது வாழ்க்கை பரிசுத்தமாகிவிடாது. அதேசமயம் அழுக்குநீரைக் கவிர்த்துவிட்டு சுத்த நீர் ஊற்றினால் மட்டுமே பாத்திரம் முழுவதும் சுத்தமாயிருக்கும். அதுபோல பாவமுள்ள வாழ்க்கையின் பாவங்களை இயேசுவின் ரத்தத்தில் வைக்கும் நம்பிக்கையினால் முற்றிலும் கழுவி, புதிய வாழ்க்கை வாழ்ந்தால் மட்டுமே மோட்சமுண்டு.

அழுக்குச் சட்டை அணிந்தவனை யாரும் பெரியவர்கள் அழைக்கப்பட்டிருக்கும் விருந்து சாலைக்குள் அனுமதிக்க மாட்டார்கள். அதைத் துவைத்துச் சுத்தமாக்கி அணிந்தவன் மட்டுமே விருந்தாளியாக ஏற்கப்படுவான். பாவமுள்ள மனிதன் பரலோகத்திற்குள் போக முடியாது. பாவமன்னிப்பைப் பெற்றவன் மட்டுமே பரலோகத்திற்குள் அனுமதிக்கப்படுவான்.

பரலோகத்தில் அனுமதிக்கப்படாத யாவரும் பலவந்தமாகத் தள்ளப்படும் இடம் நரகம்தான் என்பதை பின்வருகிற பாடங்களில் மேலும் தெளிவாக அறியலாம்.

மலைகளைச் சுற்றியும், நதிகளில் நீராடியும், வேறு உடல் சம்பந்தப்பட்ட பக்தி செய்கைகள் மூலமும் பெற்றுக்கொள்ள முடியாத பாவமன்னிப்பாகிய பாக்கியத்தை நீங்கள் பெற விரும்பினால், இப்போதே இந்த இடத்திலேயே அதைப் பெற்றுக்கொண்டுவிடலாம். அப்படிப் பெற விரும்புகிற நீங்கள் கீழ்க்கண்ட ஜெபத்தை முழு மனதுடன் முழங்காலில் நின்று, பாவமன்னிப்பின் சந்தோஷம் உங்கள் மனதில்பொங்கியெழும்வரை திரும்பத்திரும்ப சொல்லுங்கள்.

மகா பரிசுத்தரும், என்னைப் படைத்தவரும், பாதுகாத்து வருகிறவருமான இயேசுவே, உம்மை யாரேன நான் அறிந்துகொண்டேன். நீர் ஒருவரே தேவனும் தேவகுமாரனுமாய் இருக்கிறீர். உமது பரிசுத்தமுள்ள கண்களுக்கு முன்பாக நான் ஒரு பாவியென்று உணருகிறேன். எனது வாழ்வில் இதுவரை செய்த அநேகமான பாவங்களுக்காக நான் மிகவும் மனம் வருந்துகிறேன். அவைகள் முழுவதும் எனக்கு நினைவுக்கு வராவிட்டாலும். நீர் எல்லாவற்றையும் கணக்கு வைத்திருக்கிறீர். என் பாவங்களின் பயனாய் நான் அனுபவித்திடும் துன்பங்களைக் கண்டும் நான் இதுவரை உம்மை ஏற்றுக்கொள்ளாததிற்காக வருந்துகிறேன். உமது திருரத்தத்தால் நான் இன்றுவரை செய்த, நினைத்த எல்லாப் பாவங்களையும் தயவாய் மன்னியும். இன்றுமுதல் நான் முற்றிலும் புதிய பாவமில்லாத வாா்வு வாழவிரும்புகிறேன்.

இன்று துவங்கும் இந்த வாழ்க்கையினை உம்முடைய வார்த்தையின்படியே என்வாழ்வின் முடிவுவரை நடத்தி, உம்முடைய ராஜ்யத்தில் என்னைச் சேர்த்துக்கொள்ளும். அவநம்பிக்கை, உலகத்தின் இச்சை, சாத்தானின் போராட்டங்களால் நான் சோர்ந்துபோய், பரிசுத்த வாழ்க்கையையும், அதைத்தருகிற உம்மையும் விட்டுவிடாதிருக்க கிருபைசெய்யும். உமக்கே சகல துதியும். மகிமையும் உண்டாவதாக. ஆமென்.

இந்த ஜெபத்தை உண்மையான மனதோடும், நம்பிக்கையோடும் நீங்கள் செய்தால், உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டு, நீங்கள் புதிதாய்ப் பிறந்த குழந்தையைப்போல பரிசுத்தமாகிவிடுகிறீர்கள். அந்த வினாடியே உங்கள் மனதிலிருந்த பாரங்கள் விலகி, மிகுந்த சந்தோஷமும், சமாதானமும் உங்கள் இருதயத்தை நிரப்பும். அப்படி நிரப்பும்வரை இந்த ஜெபத்தைத் திரும்பத்திரும்பச் செய்து இன்றே பாவமன்னிப்பைப் பெற்றுவிடுங்கள். உங்கள் பாவங்களுக்காக இயேசு பாடுபட்டுவிட்டதால் நீங்கள் இனி அதன் பலனை அனுபவிக்க வேண்டியதில்லை. என்ன அற்புதமான பாக்கியம்!

இனி நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் தேவனுடைய பலத்துடன், நீங்கள் பெற்றுக்கொண்ட இந்த மெய்யான பரிசுத்த வாழ்வைக் கறைப்படுத்தாதபடி காத்துக்கொள்வதுதான்.

(இந்த புதிதாகப் பிறந்த அனுபவத்தைத்தான் ஆன்மா மறுபடி பிறக்கிறது என்று கூறுகிறோம். இதைத் தவறாகப் புரிந்துகொண்டவர்கள்தான் மனிதன் நாயாக, நரியாக, புழுவாக மறுபடியும் பிறக்கிறான் என நினைத்துக்கொள்கிறார்கள். இந்த ஆன்மாவின் மறுபடி பிறப்பதை உணர்ந்து இதற்கு வெளியரங்கமாகச் செய்யப்படும் அடையாள செய்கைதான் திருமுழுக்கு என்று அழைக்கப்படும் ஞானஸ்நானம். இதைப்பற்றி பின்வரும் பாடங்களில்

அறிந்து பயனடைவோம்)

இறுதியாக. எவ்வித பொருட்செலவுமின்றி, விரதங்கள், சரீர பாடுகள், மலையேற்றங்கள், புனித பயணங்கள் ஏதுமின்றி, நீங்கள் இருந்த இடத்திலேயே பாவமன்னிப்பையும், பரிசுத்த வாழ்க்கையையும் பெற்றுக்கொண்டீர்கள். இந்த பாக்கியத்தை மற்றவர்களும் பெற்றுக்கொள்ள உங்கள் அனுபவங்களை அவர்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள். தேவன்தாமே உங்கள் யாவரையும் தமது கிருபையும், சந்தோஷமுமுள்ள ஆவியானவரால் வழிநடத்துவாராக.

**கீழ்கண்ட கேள்விகளுக்கு பதிலளியுங்கள்**

1) இயேசு யார் என்று நீங்கள் ஏன் அறிந்துகொள்ள வேண்டும்?
2) இயேசு யார் என்று பொதுவாக அவரை அறியாதவர்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்?
3) இயேசு மட்டுமே தெய்வம் என்பதற்கு இப்பாடத்தில் கொடுக்கப்பட்டுள்ள உவமை என்ன?
4) இயேசு உங்களிடம் என்ன விரும்புகிறார்? அதை நீங்கள் நிறைவேற்றியுள்ளீர்களா?
5) நீங்கள் பாவமன்னிப்பைப் பெறவேண்டியது அவசியமென்று கருதுகிறீர்களா? அதைப் பெற்றுக்கொள்ள இப்பாடத்தில் கொடுத்துள்ள வழிகளைப் பயன்படுத்திப் பார்ப்பீர்களா?

அன்பார்ந்தவர்களே!

மேல்காணும் கேள்விகளுக்கான பதில்களை கீழ்காணும் அஞ்சல் அல்லது மின்னஞ்சலின் ஊடாக பதில் அளிக்கலாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.


அஞ்சல் முகவரி: **J.K.JESUDOSS CHELLADURAI**
**604 Third Building,**
**Shanthi Park Appartments**
**Jayanagar 9 th Block**
**Bangalore -69**
**India**
மின்னஞ்சல் முகவரி: **jkjesudoss@yahoo.com**


## பாடங்கள்:


- இயேசு யார்
- இயேசுவின் தெய்வீகம்
- இரட்சிப்பின் வழி
- ஜெபமும் வேதவாசிப்பும்
- சாத்தானும் மனிதனும்
- மோட்சமும் நரகமும்
- ஞானஸ்நானமும், பரிசுத்த ஆவியானவரும்
- சுவிசேஷமும், விசுவாசியும்
- திருச்சபையும், சபைப்பிரிவுகளும்
- இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை


copyright 1999-2017 TAMILCHRISTIAN.COM All rights reserved.